செய்தி வெளியீடு எண் : 1615 நாள் : 16.09.2022

செய்தி வெளியீடு

## ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகை கால ஆவின் சிறப்பு இனிப்பு வகைகள் அறிமுகம்:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் சென்னை ஆவின் தலைமை அலுவலகத்தில் இன்று (16.09.2022) ஆயுத பூஜை மற்றும் தீபாவளி சிறப்பு இனிப்புகளை விற்பனைக்கு அறிமுகப்படுத்தினார்.

பொது மக்கள் இடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ள ஆவின் பால் பொருட்கள், சுமார் 4.5 லட்சம் கிராமப்புற பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்த பால் மூலம் தயார் செய்யப்படுவதாகும். ஆவின், மாநிலம் முழுவதும் அமைந்துள்ள 27 ஒன்றியங்கள் வாயிலாக சுகாதாரமான முறையில் தரம் ஒன்றே குறிக்கோளாக கொண்டு பால் மற்றும் 225 வகையான பால் பொருட்களை தயாரித்து நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் வழங்கி, கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேல் பால் விற்பனையில் தமிழகத்தின் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. இதன் மூலம் ஆவின் நிறுவனம் கிராம அளவில் உள்ள இலட்சக்கணக்கான பால் உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை பெரிய அளவில் மேம்படுத்த உதவுகிறது.

இந்த நிலையில், பின்வரும் சிறப்பு இனிப்புகள் ஆயுத பூஜை மற்றும் தீபாவளியை முன்னிட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | சிறப்பு இனிப்புகள் | அளவு | விலை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | நெய் பாதுஷா [ GHEE BADUSHA ] | 250 கிராம் | 190 |
| 2 | நட்ஸ் ஹல்வா [ NUTS HALWA ] | 250 கிராம் | 190 |
| 3 | ஸ்டப்டு மோதிபாக் [ STUFFED MOTIPAK ] | 250 கிராம் | 180 |
| 4 | காஜு பிஸ்தா ரோல் [ KAJU PISTA ROLL ] | 250 கிராம் | 320 |
| 5 | காஜு கத்லி [ KAJU KATLI ] | 250 கிராம் | 260 |
| 6 | வகைப்படுத்தப்பட்ட இனிப்பு வகைகள் [ ASSORTED PACK ] | 500 கிராம் | 450 |
| 7 | நெய் அல்வா [ GHEE HALWA ] | 250 கிராம் | 125 |
| 8 | கருப்பட்டி அல்வா [ KARUPATTI HALWA] | 250 கிராம் | 170 |
| 9 | மிக்ஸர் ( MIXTURE ) | 200 கிராம் | 100 |

இந்த இனிப்புகள் அனைத்தும் தரமான முறையில் சுத்தமான ஆவின் அக்மார்க் நெய்யினால் தயாரிக்கப்படுகிறது. நெய் பாதுஷா, நட்ஸ் ஹல்வா, ஸ்டப்டு மோதிபாக், காஜு பிஸ்தா ரோல், காஜு கத்லி மற்றும் வகைப்படுத்தப்பட்ட இனிப்புகள் சென்னை அம்பத்தூர் பால் பண்ணையில் தயாரிக்கப்பட்டு பிரத்யேகமான முறையில் (Modified Atmospheric Packing) பேக் செய்யப்படுகிறது, இதனால் இனிப்பு வகைகளை கூடுதல் நாட்கள் வரை வைத்து பயன்படுத்தலாம். கருப்பட்டி அல்வா விருதுநகர் ஒன்றியத்திலும் நெய் அல்வா திருநெல்வேலி ஒன்றிய பால் பண்ணையிலும் தயாரிக்கப்படுகிறது.

இவை அனைத்தும் தமிழகம் முழுவதும் 10,000–க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களிலும், பொதுமக்கள் அதிகம் கூடும் சந்தைகள், சாலை சந்திப்புகள், பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களை தேர்வு செய்து சிறப்பு விற்பனை மையங்கள் மூலமாகவும் பொது மக்களுக்கு சில்லறை விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த சிறப்பு இனிப்புகள் முகவர்கள் மூலம் விற்பனை செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்த உதவும் வகையில் அரசு துறை அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு ஊழியர்கள், கூட்டுறவு நிறுவனங்கள், போக்குவரத்து துறை மற்றும் பிற நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான காரம் மற்றும் இனிப்பு வகைகளை ஆவின் நிறுவனத்தில் முன்பதிவு செய்து பெறலாம்.

மேற்கண்ட இனிப்பு வகைகளை மொத்தமாக ஆர்டர் செய்ய பின்வரும் தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி வாயிலாக தொடர்பு கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| சென்னை தலைமை அலுவலகம் | – | 7358018395 |
| சென்னை (தெற்கு மண்டலம்) | – | 7358018391 |
| சென்னை (வடக்கு மண்டலம்) | – | 7358018392 |
| சென்னை (மத்திய மண்டலம்) | – | 7358018393 |
| இதர மாவட்டங்கள் | – | 7358018396 |
| வாட்ஸ் ஆப் எண் | – | 7358018390 |
| கட்டணமில்லா எண் | – | 18004253300 |
| மின்னஞ்சல் முகவரி | : | aavinspecialorders@gmail.com |

பொதுமக்கள் தங்களின் கருத்துக்களை பதிவு செய்ய ஆவினின் @AavinTn முகநூல், ட்விட்டர் மற்றும் இன்ஸ்டாக்ராம் ஆகிய சமூக வலைத்தளங்களையும், மேலும் கூடுதல் தகவல்களுக்கு 18004253300 என்ற அலைபேசி எண்ணை 24X7 தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் பால்வளத்துறை ஆணையர்/ ஆவின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் ந.சுப்பையன் இ.ஆ.ப., அவர்கள், மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலாண்மை இயக்குநர்
த.நா.பா.உ.கூ.இணையம்

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in